1994 மார்ச் 19]

நானே நேரிடையாகச் சென்று பார்வையிட்டு, அந்த மாணவர்களை விசாரித்து, அதற்கு எவ்வளவு தொகை த்தேவைப்படுகிறதோ அந்த அளவுக்கு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களிடம் முறையீடு செய்து கோருகிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 58, திரு. எம். ஆண்டி அம்பலம், மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்.

58—

இந்து சமய அறநிலைய வாரியத் தலைமை அலுவலகத்தை திருச்சிக்கு மாற்றுதல்

*11061—திரு. எம் ஆண்டி அம்பலம் : மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க் காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருச்சி, தமிழ்நாட்டின் அனைத்துப் பகுதிகளுக்கும் மையமாக இருப்பதால், இந்து சமய அறநிலைய வாரியத்தின் தலைமை அலுவலகம் சென்னையிலிருப்பதை திருச்சிக்கு மாற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருக்கோயில் நிர்வாக வாரியத்தின் தலைவர், செயலாளர் மற்றும் பெரும்பாலான உறுப்பினர்கள் சென்னையில் உள்ளதால் வாரியத்தின் நிர்வாக நலனுக்காக அதன் தலைமையகம் சென்னையில் இருப்பது அவசியம். அதனைத் திருச்சிக்கு மாற்றும் எண்ணம் அரசுக்கு இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் எம் ஜி. ஆர். அவர்கள் தமிழ்நாடு தலைநகரத்தையே திருச்சிக்கு கொண்டு செல்ல நினைத்தார். அவர் விட்டுச் சென்ற கொள்கையின்படி, தமிழகத்திலுள்ள மையப் பகுதியான திருச்சிக்கு இந்த நிர்வாகத்தைக் கொண்டு செல்ல அரசு முன் வருமா என அறிய விரும்புகிறேன்,

[1994 மார்ச் 13

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருக்கோயில் நிர்வாக வாரியத்தினுடைய தலைவர் தமிழகத்தினுடைய முதல்வர் நம்முடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் அதற்கடுத்து 17 உறுப்பினர்கள் இருக்கின்றார்கள். 14 உறுப்பினர்கள் சென்னையிலே தான் இருக்கின்றார்கள்.

முற்பகல் 11-00

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் முன் அனுமதியோடு வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது சம்பந்தமான துறையும் மற்ற அரசு அலுவலகங்களும் சென்னையில் இருப்பதால், இந்த அரசு தெய்வீகத்தைப் பேணிக் காக்க வேண்டும், தெய்வீகத்தில் ஒரு மறுமலர்ச்சியை ஏற்படுத்த வேண்டும் என்பதற்காகத்தான் சென்னையில் வைக்கப்பட்டிருக்கிறது. அதன் தலைவர் முதலமைச்சர் அவர்கள் என்கிற காரணத்தால் அடிக்கடி துறை அதிகாரிகளோடு கலந்தாலோசிக்க வேண்டும் என்பதற்காக இங்கே இருக்கிறது. அதை மாற்றுவதற்கு வசதிகள் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில நிறைய கோயில்கள் இருக்கின்றன. அவற்றில் பூசை இல்லாமலே சில கோயில்கள் இன்னமும் இருக்கின்றன. அதை கனம் அமைச்சர் அவர்கள் மனதில் எடுத்துக்கொண்டு 100 ரூபாய் வருமானம் கூட இல்லாத அந்தக் கோயில்களில் நல்லபடியாக அந்த பூசைகளைச் செய்வதற்கு அரசு முன்வருமா ? அதோடு கோயில் விளங்கத்தான் குடி விளங்கும் என்று சொல்வார்கள். அந்த அடிப்படையில் அமைச்சர் அவர்கள் இதைச்செய்து தருவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதயதெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிக்கு வந்ததற்குப் பிறகுதான் கேட்பாரற்று, பார்ப்பாரற்று கிடககின்ற கோயில்களை எல்லாம் சீர்திருத்தி (மேசையைத் தட்டும் ஒலி] அந்தக் கோவில்களில் எல்லாம் அன்றாடம் ஒருகால பூஜையாவது வைக்கவேண்டும் என்பதற்காகத்தான் ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. கவர்னர் உரையிலே கூட பார்த்திருப்பீர்கள். 5000 கோயில்களில் 2500 கோயில்களை ஒருகால பூஜைக்கு எடுத்துக் கொள்கிறோம். நேற்று நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் ஈஸ்வரன் அவர்களுடைய தொகுதியில் 3 கோயில்களில் களவு போய்விட்டது

என்று சொன்னார்கள். ஒரே கூட்டத்தைச் சேர்ந்த 5 பேர் தான் இந்தக் குறைபாட்டைச் செய்திருக்கிறார்கள். இது 1989-லேயிருந்து நடந்தது. இதயதெய்வம் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியில்தான் இது கண்டுபிடிக்கப்பட்டு அத்தனையும் இன்று கைப்பற்றப்பட்டு இருக்கிறது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 59, டாக்டர் அ. ஸ்ரீதரன், மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர்

59—

வால்பாறையில் பயணிகளுக்காக விடுதி கட்டுதல்.

*21549—டாக்டர் அ. ஸ்ரீதரன் :

மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வால்பாறையில் சுற்றுலாத்துறையின் மூலம் பயணிகள் தங்கும் மற்றும் உணவு விடுதி ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான், சுற்றுலாத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

வால்பாறையில் சுற்றுலாத் துறையின் மூலம் பயணிகள் தங்கும் மற்றும் உணவு விடுதி அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

டாக்டர் அ. ஸ்ரீதரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுற்றுலாத் துறையினுடைய முக்கிய நோக்கமே சுற்றுலாத் தலங்களின் சுற்றுப்புறச் சூழலும், அங்கேயுள்ள இயற்கை எழிலும் கெடாமல் சுற்றுலாத் துறையை மேம்படுத்த வேண்டும் என்பதுதான். எனவேதான் நான் சுற்றுலாத் துறையின் மூலமாக அங்கே தங்கும் விடுதி கட்டவேண்டும் என்று கேள்வி எழுப்பி இருக்கிறேன். காரணம் பொதுப் பணித் துறைக்குச் சம்பந்தப்பட்ட ஆழியாறு டேம், நீராறு டேம், சோலையாறு டேம், மற்றும் பரம்பிக்குளம் டேம் ஆகிய டேம்களின் கேச்மென்ட் ஏரியாவாக வால்பாறை மலைப்பகுதி இருப்பதாலும், அங்கே இந்திரா காந்தி வனவிலங்கு சரணாலயம் இருப்பதாலும் அங்கேயுள்ள இயற்கை எழிலை அழிக்காத வகையில் சுற்றுலாத்துறையை மேம்படுத்தி பணிகளைச் செய்ய வேண்டும் என்பதால் சுற்றுலாத் துறையின் மூலமாகவே கட்டித்தந்தால் இயற்கை எழிலையும், இயற்கை அழகையும் பேணிக்காக்க முடியும். அதே சமயத்தில் சுற்றுலாத்துறை